# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020**

**தரம் - 12 (2021) | உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் -1**


பெயர் / சுட்டெண் : .....................

திரு.ர.யாழினி B.Sc (Hons), PGDE

**அறிவுறுத்தல்கள் :**

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

01) இனப்பெருக்கலுக்காகத் தயார்ப்படுத்தப்பட்ட குறை கடினத் தண்டுத்துண்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.




இவற்றுள் மிகப் பொருத்தமானவாறு தயார்ப்படுத்தப்பட்டுள்ள தண்டுத்துண்டம் எது? அல்லது துண்டங்கள் எவை?

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம்
4. A, B மாத்திரம் 5. A,C மாத்திரம்

02) இழைய வளர்ப்பின் போது தளப் பிரவாகக் கபினைற்று (Laminar flow cabinet) பயன்படுத்துவதன் நோக்கம்.

A. இழைய வளர்ப்பின்போது இழையங்களை இட்டு வைத்தல்
B. வளர்ப்பு ஊடகத்தைத் தயாரித்துக் கிருமியழித்தல்
C. கிருமியழிக்கப்பட்ட நிலையில் ஊடகத்தினுள் முதன்மை இழையத்தை இட்டுவைத்தல்
D. புறத்தேயிருந்து நுண்ணங்கிகள், நடுகை ஊடகத்தினுள் புகுவதைத் தவிர்த்தல்

மேற்படி கூற்றுக்களுள் மிகச் சரியானவை எவை?

1. A, B மாத்திரம் 2. C, D மாத்திரம் 3. B,Cமாத்திரம்
4. A, D மாத்திரம் 5. A,B,C,D ஆகிய எல்லாம்

03) இயற்கையான பதிய இனப்பெருக்க அமைப்புக்கள் மாத்திரம் அடங்கியுள்ள தேர்வு பின்வருவனவற்றுள் எது?

1. தண்டுத்துண்டம், ஓடி, வித்து, குமிழம்.
2. உறிஞ்சி, இழைய வளர்ப்பு நாற்று, வேர்த்தண்டுக்கிழங்கு, தண்டுக்கிழங்கு
3. வேர்த்துண்டம், தண்டுத்துண்டம், இலைத்துண்டம், ஓடி
4. வேர்த்தண்டுகிழங்கு, உறிஞ்சி, குமிழம், தண்டுமுகிழ்.
5. இழைய வளர்ப்பு நாற்று, வித்து மூலம் பெற்ற நாற்று, உறிஞ்சி, குமிழம்


04) வைரசு அற்ற நிலையில் நாற்றுக்கள் பெறுவதற்கு மிகப் பொருத்தமான இழையவளர்ப்பு முறை எது?
1. தாவர இலைத்துண்டங்களை வளர்த்தல்
2. அரும்புகள், பிரியிழையம் ஆகியவற்றை வளர்த்தல்
3. முளையங்கள் வளர்த்தல்
4. மகரந்தக் கூடு வளர்த்தல்
5. மகரந்த மணிகளை வளர்த்தல்

05) உறிஞ்சிகள் மூலம் எளிதாக இனப்பெருக்கத்தக்க தாவர வகைகள் எவை?
1. வாழை, அன்னாசி    2. வல்லாரை, கங்குன் கீரை
3. ஸ்ட்ரோபெரி, திராட்சை    4. சேம்பு, மஞ்சள்
5. வெங்காயம், சணல்

06) பதியமுறை இனப்பெருக்கத்தின் அனுகூலங்கள் பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A. வித்துக்கள் அற்ற தாவரங்களையும் முளைக்கும் தன்மை குறைவான வித்துக்களைக் கொண்ட தாவரங்களையும் இனம்பெருக்குவதற்காகப் பயன்படுத்தலாம்
B. தாய்த்தாவரத்தை முற்றிலும் ஒத்த மகட் தாவரச் சந்ததியை எப்போதும் பெறலாம்
C. குறுகிய காலத்தில் அதிக தொகைத் தாவரங்களைப் பெருக்கிக்கொள்ளலாம்
D. வருடத்தின் எந்தக் காலப்பகுதியிலும் நடுகைப்பொருள்கள் பெறலாம்
மேற்படி கூற்றுக்களுள் சரியானவை எவை,
1. A, B மத்திரம்    2. A, C மத்திரம்    3. A,B, C மத்திரம்
4. A,C, D மத்திரம்    5. B,C, D மத்திரம்

07) படத்தில் A,B,C எனக் காட்டப்பட்டுள்ள தண்டுத்துண்டப் பகுதிகளைப் பயன்படுத்தி இனம் பெருக்குவதற்குப் பொருத்தமான பயிர்களை முறையே காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

1. கிளிரிசிடியா, லெமன், மல்லிகை
2. மரவள்ளி, ரோசா, குரோட்டன்
3. வற்றாளை, ரோசா, மரவள்ளி
4. போகன்விலா, கோலியாசு, வத்தாளை
5. வற்றாளை, சிறுகிழங்கு, கங்குன்




08) பதியமுறை இனப்பெருகத்கத்தின் பிரதானமான ஒரு பிரதிகூலம் யாது?
1. கடுமையான வறட்சியைக் சகிக்காமை
2. பெறக்கூடிய புதிய தாவரங்களின் எண்ணிக்கை வரையறைப்பட்டதாக இருத்தல்
3. பயிற்றப்பட்ட உழைப்பாளர் தேவைப்படுதல்
4. புதிய பேதங்களைப் பிறப்பிக்க முடியாமை
5. வித்து உற்பத்தி செய்யும் தாவரங்களுக்காகப் பயன்படுத்த முடியாமை

09) வேர்த்தண்டுக்கிழங்கு, தண்டுக்கிழங்கு, தண்டு முகிழ் ஆகியன இனப்பெருக்க தாவர அமைப்புக்கள் முறையே பின்வருவனவற்றுள் எவை?
1. உருளைக்கிழங்கு, மஞ்சள், சேம்பு    2. வெங்காயம், அன்னாசி, வாழை
3. இஞ்சி, சேம்பு, உருளைக்கிழங்கு    4. வாழை, வெங்காயம், சேம்பு
5. மஞ்சள், இஞ்சி, சேம்பு

10) எளிய பதியவைத்தல் முறை மூலம் வெற்றிகரமாக இனம்பெருக்கத்தக்க இரண்டு தாவரங்களாவன,
1. மாதுளை, கொய்யா    2. மல்லிகை, லெமன்    3. எலுமிச்சை, தோடை
4. றம்புட்டான், மாதுளை    5. ரோசா, குரோட்டன்

11) ஒட்டு வேலையின் போது ஒட்டுச் சந்தியைப் பொலித்தீன் நாடாவினால் சுற்றிக் கட்டும்போது, கீழிருந்து மேல் நோக்கிச் சுற்றுவதனால் எதிர்பார்க்கப்படுவது யாது?
1. ஒட்டுப் பொருத்தபாடின்மை எற்படுவதைத் தவிர்த்தல்
2. ஒட்டுச் சந்தியினுள் நீர் புகுவதைத் தவிர்த்தல்
3. ஒட்டுச் சந்தி முறிவதைத் தவிர்த்தல்
4. ஒட்டுக்கட்டைக்கும் ஒட்டுமுளைக்கும் இடையே நீர் கொண்டுசெல்லல் வினைத்திறனை அதிகரித்தல்
5. ஒட்டு முளையினுள் நுண்ணங்கிகள் புகுவதைத் தவிர்த்தல்

12) தாவர ஒட்டு வேலையின் போது எதிர்நோக்கப்படும் பிரதிகூலமான ஒரு சந்தர்ப்பம் பின்வருவனவற்றள் எது?
1. ஒட்டுச் சந்தி பொருந்தாததன்மை ஏற்படல்
2. பாதகமான நிலைமைகளைக் சகிக்கத்தக்க தாவரங்களை உற்பத்தி செய்யமுடியாமை
3 ஆண்டில் சில காலப்பகுதிகளில் தாவரங்களில் ஒட்டுவேலை செய்ய முடியாமை
4. ஒட்டுத்தாவரங்கள் நிதமும் நோய்களுக்கும் பீடைத்தாவரங்களும் ஆளாதல்
5. ஒட்டு வேலை செய்வதற்காகப் பயிற்றப்பட்ட உழைப்பாளர்களும் அதுபற்றிய அறிவும் தேவையாக இருத்தல்

13) இழைய வளர்ப்புச் செயன்முறையின் படிமுறைகளை சரியான ஒழுங்கில் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
1. உட்பாய்ச்சுதல் (inoculation), பெருக்கல், முதன்மை இழையம் பெறப்படல், நற்றுக்களைப் புறச் சூழலுக்குப் பழக்குதல்
2. வளர்ப்பு ஊடகத்தைத் தயார்ப்படுத்தல், தாய்த்தாவரத்தைத் தெரிவு செய்தல், முதன்மை இழையம் பெறல், பெருக்கல்
3. முதன்மை இழையம் பெறல், உட்பாய்ச்சுதல், பெருக்குதல், புறச்சூழலுக்குப் பழக்குதல்
4. தாய்த்தாவரத்தைத் தெரிவுசெய்தல், நடுகை ஊடகத்தைத் தயார்ப்படுத்தல், முதன்மை இழையம் பெறல், பெருக்குதல்
5. நடுகை ஊடகத்தைத் தயார்ப்படுத்தல், முதன்மை இழையம் பெறல், பெருக்குதல், உட்பாய்ச்சுதல்


14) இழைய வளர்ப்பின்போது பயன்படுத்தப்படும் ஊடகங்களையும் உபகரணங்களையும் கிருமியழித்தல் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
a. நடுகை ஊடகத்தைக் கிருமியழித்தலுக்கு அமுக்கவப்பபைப் பயன்படுத்தலாம்
b. கண்ணாடிப் பாத்திரங்களையும், ஏனைய உபகரணங்களையும் கிருமியழிப்பதற்கு மின்கனலடுப்பு பெரிதும் பொருத்தமானது
c. ஓமோன் வகைகளைக் கிருமியழிப்பதற்காக மென்சவ்வு வடிகட்டிகள் பயன்படுத்தப்படும்

மேற்படி கூற்றுக்களுள் சரியானவை எவை?
1. A, B மாத்திரம் 2. A, C மாத்திரம் 3. A, C மாத்திரம்
4. B, C மாத்திரம் 5. A, B, C ஆகிய எல்லாம்

15) எந்த வகை ஒட்டு வேலையின் போது ஒட்டு முளையின் கீழ் முனை, ஏறந்தாழ 4cm நீளமான பகுதி ஆப்பு வடிவில் வெட்டப்படும்?
1. H ஒட்டு 2. அரும்பொட்டு 3 T ஒட்டு
4. பிளவுக்கிளையொட்டு 5. தலைகீழ் T ஒட்டு

## அமைப்புக்கட்டுரை வினாக்கள்

A. செயற்கையான பதிய இனப்பெருக்க முறையொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது.



i. படத்தில் காட்டியுள்ள செயற்கைப் பதிய இனப்பெருக்க முறை யாது?

……………………………………………………………………………………

ii. இம்முறையைக் கையாண்டு இனம் பெருக்குவதற்குப் பொருத்தமான மூன்று தாவரங்களைப் பெயரிடுக.

1. ....................................................  2. ....................................................

3. ....................................................

iii. இம்முறையின் பிரதான ஓர் அனுகூலத்தைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

B.

i. இழைய வளர்ப்பின் போது கிருமியழிப்புக்காகப் பயன்படுத்தப்படும் இரண்டு முறைகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………..

ii. நடுகை ஊடகங்களைக் கிருமியழிப்புச் செய்வதற்குப் பொருத்தமான கிருமியழிப்புமுறை யாது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………..

iii. இழைய வளர்ப்பின் போது முதன்மை இழையத்தை இட்டு வைப்பதற்காகப் பயன்படுத்தும் ஊடகத்துக்குச் சார்பாக, உப நடுகைக்காகப் பயன்படுத்தும் ஊடகத்தில் அடங்கியிருக்க வேண்டிய ஓமோன் எது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………..

iv. வைரசு நோய்களற்ற நாற்றுக்கள் பெறுவதற்காக, இழைய வளர்ப்பின் போது பயன்படுத்துவதற்குப் பொருத்தமான தாவரப்பகுதி யாது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………..

v. மேலே பகுதி iv இல் குறிப்பிட்ட தாவரப்பகுதியைப் பயன்படுத்துவதால் வைரசு நோய்கள் அற்ற தாவரங்கள் கிடைக்கும் விதத்தைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………

……………………………………………………………………………………..

**C.**

i. தண்டுத்துண்டங்களை நடும் போது அவற்றில் உள்ள இலைகள் முற்றுமுழுதாக நீக்கப்படாமைக்குக் காரணம் யாது?

……………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………...

ii. தண்டுத்துண்டு வேர் கொள்வதைத் துரிதப்படுத்துவதற்காகப் பயன்படும் தாவர ஓமோன் வகை ஒன்றினைப் பெயரிடுக.

……………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………...

iii. பதிய இனப்பெருக்க அமைப்புக்களில் வேர்கொள்ளல் துரிதமாக நிகழுவதற்கான காரணம் யாது?

……………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………...

D.

i. ஒட்டு வேலைக்காகப் பயன்படுத்தப்படும் ஒட்டுமுளையில் காணப்பட வேண்டிய இரண்டு இயல்புகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………...

ii. ஒட்டுவேலையை வெற்றிகரமாகச் செய்வதற்காகக மேற்கொள்ளவேண்டிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………...

……………………………………………………………………………………………...

***